கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

மனுதாரர் தரப்பு 1 வது சாட்சி (ம.சா.1)

<u>இ.ம.எண்.4/2023 இன் அ.வ.எண். 1/2019</u>

| | | |
|---|---|---|
| பெயர் | – | பாலசுப்ரமணியம் |
| த/பெ | – | ஆறுமுகம் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| ஜாதி | – | |
| மதம் | – | |
| வயது | – | 37 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2023 ம் ஆண்டு ஜுலை மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் திருநெல்வேலி மருத்துவ கல்லூரியில் உதவி நிலைய மருத்துவ அலுவலராக பணி செய்து வருகிறேன். எங்கள் திருநெல்வேலி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவருக்கு அழைப்பாணை வந்தது, அழைப்பாணை வந்ததன் பேரில் அவர் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு அதிகார ஆவணம் கொடுத்துள்ளார்.

| ம.சா.ஆ. | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 1 | 13.07.2023 | அதிகார ஆவணம் | அசல் |

எனக்கு டி.என்.ஏ பரிசோதனை குறித்து சாட்சியம் அளிக்கும் அளவிற்கு தகுதி பெற்றுள்ளேன். பொதுவாக டி.என்.ஏ எப்படி நடத்தப்படும் என்றால் ரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்யப்படும். ரத்த மாதிரிகள் கிடைக்கப்படாத பட்சத்தில் வேறு எந்த வகையில் டி.என்.ஏ பரிசோதனை செய்யமுடியும் என்றால் இறந்தவர் என்றால் எலும்பு மாதிரியை எடுத்து செய்யலாம். உயிருடன் உள்ள நபர்களுக்கு ரத்த மாதிரியை எடுத்து தான் செய்ய முடியும். இறந்தவரின் வேறு ஏதேனும் உடலின் பகுதியை எடுத்து

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.07.14 17:29:25 +0530

டி.என்.ஏ பரிசோதனை செய்ய முடியுமா என்றால் முடியாது. பொதுவாக ஒரு குழந்தையின் தந்தை யார் என்பதை அறிவதற்கு தந்தை, தாயின் மற்றும் குழந்தையின் ரத்த மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ய முடியும். ஒரே தந்தை மற்றும் இரண்டு தாயார் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு இரத்த மாதிரிகளை எடுத்து டி.என்.ஏ பரிசோதனை மேற்கொள்ள முடியுமா என்றால் முதல் தாய், தந்தை, அவர்களுடைய குழந்தைகளையும் அதேபோல் அதே தந்தை, இரண்டாம் தாய், அவருடைய குழந்தைகளையும் இரத்த மாதிரிகளை வைத்து தான் பரிசோதனை செய்ய முடியும்.

2) தந்தை இறந்துவிட்டார் மேற்படி இரண்டு தாயார் வழி பிறந்த குழந்தைகளுக்கு டி.என்.ஏ பரிசோதனை செய்வதற்கு என்ன வழிவகை உள்ளது என்றால் இறந்தவரின் எலும்பை வைத்தோ அல்லது இறந்தவரின் தாய் தந்தையரின் இரத்த மாதிரிகளை வைத்தோ, இறந்தவரின் உடன் பிறந்தவர்களின் இரத்த மாதிரிகளை வைத்தும் மற்றும் குழந்தைகளின் இரத்த மாதிரிகளை ஒப்பீடு செய்து டி.என்.ஏ பரிசோதனை செய்யலாம். தந்தை இறந்த பின்னர் இரண்டு தாய் மூலம் பிறந்த குழந்தைகளின் இரத்த மாதிரிகளை வைத்து டி.என்.ஏ. பரிசோதனை செய்து தந்தை யார் என்று கண்டுபிடிக்க முடியுமா என்றால் முடியாது.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

டி.என்.ஏ பரிசோதனை தடய அறிவியல் துறையில் தான் செய்ய முடியும் என்றால் இரத்த மாதிரிகளை நாங்கள் எடுப்போம் அதை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைப்போம். தடயஅறிவியல் துறையிலும் Clinical pathalogy பிரிவில் படித்தவர்கள்தான் செய்ய முடியும் என்றால் தடய அறிவியல் துறையில் உள்ள Lab இல் உள்ளவர்கள் செய்யலாம்.

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.07.14 17:29:39 +0530